செ.வெ.எண்: 24 நாள்:12.09.2016

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் சுமார் ரூ.99.78 கோடி மதிப்பில் விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மலைக்குடிப்பட்டியில் எம்.எம்.572 மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., சார்பில் கடன் தள்ளுபடி பயனாளிகளுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதிவாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் 11.9.2016 அன்று வழங்கினார்கள்.

இதில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் கடன் தள்ளுபடி பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகளின் துயரை போக்கும் வகையில் சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்ற வேளாண் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் எம்.எம்.572 மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., சார்பில் 678 சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்ற ரூ.2.15 கோடி (அசல் மற்றும் வட்டி) விவசாயக்கடன்கள் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டு அவற்றிற்கான சான்றிதழ்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகஅரசின் வேளாண் கடன் தள்ளுபடித்திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில்

இயங்கி வரும் 136 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் 1 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் உள்ள 33817 சிறு, குறு விவசாயிகளுக்கு 31.03.2016 அன்று நிலுவையிலுள்ள கடன் தொகை ரூ.92,05,59,475/-ம், வட்டித்தொகை ரூ.6,94,66,898/-ம், அபராத வட்டி ரூ.67,61,447/-ம், இதர செலவினம் ரூ.10,54,020/-ம் என ஆகமொத்தம் ரூ.99,78,41,840/- மதிப்பில் சிறு, குறு விவசாயிகள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளின் கஷ்டம் முழுவதுமாக நீக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதியுடைய விவசாயிகளின் ஆட்சேபனை மனுக்கள் மீது சரகத்துணை பதிவாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு தகுதியான விவசாயிகள் கடன் தள்ளுபடி திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆட்சேபனை மனுக்கள் மீது மேல்முறையீட்டு மனுக்கள் 16.9.2016 வரை மண்டல இணைப்பதிவாளரிடம் விவசாயிகள் அளிக்கலாம். எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்டங்களை பயனாளிகள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.செல்லத்துரை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.மிருணாளினி, மத்திய வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.பால்வடிவு, துணைப்பதிவாளர் மற்றும் பணியாளர் அலுவலர் திரு.மாராட்சி, சரக துணைப்பதிவாளர் திரு.செந்தில்குமார், வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, ஊராட்சி மன்றத்தலைவர்கள் திரு.ராமசாமி, திரு.பெரியசாமி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.கணேசன், திரு.கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.